தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,
சென்னை–6

ந.க.எண்.30851/சி4/இ1/2013, நாள் : 10.07.2013

பொருள் : பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – அனைவருக்கும் கல்வி இயக்கம் – 2012–13ம் கல்வியாண்டில் வட்டார வள மையம்/தொகுப்பு வள மையத்தில் பணிபுரிந்து வரும் ஆசிரியர் பயிற்றுநர்களை பட்டதாரி ஆசிரியர்களாக பணிமாறுதல் செய்தல் – சார்பு.

பார்வை : அரசுக் கடித எண்.12724/அகஇ2/2013—1, நாள் : 04.07.2013

----

அனைவருக்கும் கல்வி திட்டத்தைச் சார்ந்த வட்டார மற்றும் குறு வள மையத்தில் பணியாற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் பணிமூப்பின் அடிப்படையில் ஆண்டிற்கு 500 ஆசிரியர் பயிற்றுநர்கள் வீதம் கல்வி துறையை சார்ந்த அரசு உயர்நிலை பள்ளி/ மேல்நிலைப்பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு அரசின் அனுமதியுடன் பணி மாறுதல் வழங்கப்பட்டு வருகிறது.

2005–06ம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்ட 2654 ஆசிரியர் பயிற்றுநர்களில் ஏற்கெனவே பணிமூப்பு அடிப்படையில் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களாக பணி மாறுதல் செய்யப்பட்டட ஆசிரியர் பயிற்றுநர் போக மீதமுள்ள 1154 ஆசிரியர் பயிற்றுநர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 500 ஆசிரியர் பயிற்றுநர்களின் பட்டியல் முந்துரிமையின்படி (ஆசிரியர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்பட்ட தரவரிசைப் பட்டியலின்படி) தயார் செய்து இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள ஆசிரியர் பயிற்றுநர்கள் பணிபுரியும் மாவட்டம் மற்றும் இடத்தில் மாற்றம் ஏதும் இருப்பின் அதன் விவரங்களை சரிபார்த்து, **அன்னார் பணியில் சேர்ந்த தேதியுடன்** உடன் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். ஆசிரியர் பயிற்றுநர்கள் சார்ந்த விவரங்கள் ஏதும் பெறப்படவில்லை எனில் இதில் மாற்றம் ஏதும் இல்லாததாக கருதப்படும்.

இப்பட்டியலில் இடம் பெறும் ஆசிரியர் பயிற்றுநர்கள் எவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பின் அதன் விவரத்தையும், எவர் பெயரேனும் விடுபட்டிருந்தால் அதன் விவரத்தையும் தெரிவிக்குமாறு அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் விவரங்களை அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி எந்தவித காலதாமதத்திற்கும், நினைவூட்டலுக்கும் இடமளிக்காமல் கோரப்பட்ட விவரங்களை 11.07.2013 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பட்டியல்

ஒம்/– ச.கண்ணப்பன்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்
அனைத்து கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
அனைவருக்கும் கல்வி இயக்கம்.